(ஈஈ) சென்னையில் கொசு ஒழிப்பு நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1972-ம் ஆண்டு முதல் நகர்ப்புற மலேரியா தடுப்புத் திட்டம் சென்னை மாநகரில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இந்த வியாதி சென்னை மண்ணடி, முத்தியால்பேட்டை, வண்ணாரப் பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, மைலாப்பூர் மற்றும் திருவல்லிக் கேணி ஆகிய பகுதிகளில் பரவலாகக் காணப்படுகிறது. குடிசைப் பகுதிகள் உள்ள பகுதிகளில் இவ்வியாதி அதிகம் காணப்படுகிறது. இவ்வியாதி, கிணறுகள் மேல் நிலைத் தொட்டி ஆகியவற்றில் உள்ள தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் பரவுகிறது.

இந்த வியாதியைத் தடுப்பதில் ஏற்பட்டுள்ள தடைகள் பின் வருமாறு:—

மலேரியா தடுப்பு:

சென்னை மாநகர எல்லைக்குள் 77,000 கிணறுகளும், 51,000 தரைமட்ட தண்ணீர்த் தொட்டிகளும், 42,000 மேல் நிலைத் தொட்டிகளும், தண்ணீரைத் தேக்கி வைக்கப் பயன்படுத்தப் படுகின்றன. அந்தத் தேங்கும் தண்ணீரிலிருந்துதான் மலேரியாவைப் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகி இவ்வியாதியை தோற்றுவிக்கிறது. இந்தத் தண்ணீர்த் தேக்கங்கள் தனியார்களுடைய வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுவதால், கொசு உற்பத்தியை இந்தத் தண்ணீர் தேக்கங்களில் கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது. தனியார் வீடுகளில் உள்ள கிணறுகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள் ஆகியவைகளை கொசு உற்பத்திக்கு இடமளிக்கா வகையில் மூடுவதற்கு பொதுச் சுகாதாரம் மற்றும் மாநகராட்சி சட்டத்தின் கீழ் அறிவிப்புகள் அனுப்புவதுடன் இதனை வலியுறுத்தும் பொருட்டு இச்சட்டங்களிலுள்ள சரத்துக்களை தீவிர முறையில் செயலாற்றும்படியும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கிணறுகளை மூடுவதற்கு எடுத்த நடவடிக்கை, கிணறுகளின் சொந்தக்காரர்களின் எதிர்ப்பால் நிறைவேற்றப்படவில்லை. மலேரியா நோயால் பாதிக்கப்படும் மத்திய தரக் குடும்பத்தினர் தனியார் மருந்தகங்களில் சிகிச்சை பெறுகிறார்கள். எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும், அவர்கள் இவ்வியாதி பற்றி அப்பகுதி சுகாதார அலுவலர்களுக்கு தெரிவிப்பது இல்லை. இதனால் இவ்வியாதியைக் குறித்து தக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தடங்கலாக உள்ளது. எனினும் மலேரியா மற்றும் கொசுக் கடியினால் பாதிக்கப்படுபவர்கள் மலேரியா மருத்துவர்கள்/மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் பொழுதே அவர்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன்

தெரிவிக்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை எல்லா பதிவு பெற்ற மருத்துவர்களுக்கும்/ மருத்துவ மனைகளுக்கும் அனுப்பிவைக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு சிகிச்சை அளிக்கப்படாததாலும், இவ்வியாதி சமூகத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது. கொத்தவால் சாவடி, யானைக்கவுனி, பேசின் பாலம் ஆகிய பகுதிகளில் உள்ள நடைபாதை வாசிகளுக்கு தொடர்ந்தாற்போல் தேவைப்பட்ட மூன்று நாட்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவது இல்லை. ஆகையால், நடைபாதை வாழ்வோர் மற்றும் லாரி ஓட்டுநர்கள் போன்றவர்களுக்கு அவர்கள் வீடு திரும்பும் நேரம் அல்லது இரவு நேரங்களில் சென்று தீவிரமான முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதற்கு மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல இடையூறுகள் இருந்த போதிலும், சென்னை மாநகராட்சியால் மலேரியா தடுப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் இவ்வியாதி நடப்பு ஆண்டில் குறைந்துள்ளது. 1985-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பு 86-ம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் இவ்வியாதியின் தாக்குதல் 30 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

ஆண்டு.	மலேரியா நோயைக் கண்டுபிடிக்க இரத்தம் எடுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை.	மலேரியா நோய் தாக்குதலுக்குள்ளானவர்கள்.
1983	4.23 இலட்சம்	44,817
1984	3.92 இலட்சம்	48,523
1985	4.90 இலட்சம்	51,376
1985 அக்டோபர் வரை)	4.16 இலட்சம்	44,519
1986 (அக்டோபர் வரை)	4.25 இலட்சம்	31,427

கடந்த எட்டு ஆண்டுகளில், தற்போது மலேரியா நோய் பரவுவது குறைந்துள்ளது ஒரு நல்ல ஆரம்பமாகும். வரும் மாதங்களில், மேலும் இவ்வியாதியை தடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

கொசுக்களை ஒழித்தல்:

கொசுக்கள் உற்பத்தியைத் தடுக்க பல உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாய், அடையாறு, கூவம் ஆறு, ஒட்டேரி நல்லா ஓடை மற்றும் மாம்பலம் ஓடை ஆகிய நீரோட்டங்களில் கொசு உற்பத்தியாகிறது. அந்த நீரோட்டங்களில் கொசு உற்பத்தியை 70-லிருந்து 80 சதவீதம் குறைத்து விட்டால், சென்னை நகரில் கொசுத் தொல்லையை சமாளிக்க இயலும். இந்த நீரோட்டங்களில் அதிக அளவு கழிவு நீர் விடப்படுவதால் கொசு உற்பத்தி அதிகமாக உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மழைநீர் போக அமைக்கப்பட்டுள்ள 500 கிலோ மீட்டர் அளவுக்கு மழை நீர் வடிகால்களும், கொசு உற்பத்திக்கு ஏதுவாக உள்ளது. எனவே, கொசு உற்பத்தியைத் தவிர்க்கும் பொருட்டு கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் அடையாறு போன்ற நதிகளில் தண்ணீர் ஓட்டம் சீரான முறையில் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொதுப் பணித்துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மழை காலங்களில் தண்ணீர் தேங்குவதால் கொசு உற்பத்தி அதிகமாக இருக்கும். மக்கள் முழு ஒத்துழைப்பு அளித்தால்தான் கொசுத் தொல்லையை குறைக்க முடியும்.

கொசு ஒழிப்புக்காக, சென்னை மாநகராட்சி கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(1) கொசு கொல்லி மருந்து தெளிக்க தினசரி 220 முதல் 250 தெளிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(2) கொசுக்கள் அதிகம் உள்ள பகுதிகளில், காலையிலிருந்து மாலை வரை புகை மூலம் கொசு கொல்லி / மருந்து தெளிக்கப்படுகிறது. இதற்காக ஒரு ஊர்தியில் பொருத்தப்பட்ட இயந்திரம் மூலம் நகரில் மருந்து அடிக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(3) சென்னை மாநகர், ஒவ்வொரு பகுதியும் ஐந்து வட்டங்கள் (Divisions) கொண்ட 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, கொசு ஒழிப்பு வேலை நடைபெறுகிறது. ஒவ்வொரு வட்டத்திலும் வாரத்திற்கு ஒரு முறை கொசு ஒழிப்பு மருந்து அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் 30-லிருந்து 40 பணியாளர்கள் இவ்வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் ஒரு சுகாதார ஆய்வாளரின் கீழ் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு பத்து வட்டங்களுக்கும் ஒரு பூச்சி இயல் அலுவலர் இந்த வேலையை மேற்பார்வையிடுகிறார். இவ்வேலையை, மாநகராட்சி பகுதி முழுவதிலும் ஒரு உதவி சுகாதார அலுவலர் மேற்பார்வையிடுகிறார்.

(4) இம்மாதிரி, வாராந்திர மருந்து தெளிப்பு வேலையுடன் மாநகரில் உள்ள முக்கிய நீரோட்டங்களில் ஆகாசத்தாமரை செடிகளை அழிக்கும் பணியும் செய்யப்படுகிறது. ஏனெனில் இச்செடிகள் நீரோட்டத்தைத் தடைசெய்து கொசு உற்பத்தியை அதிகப்படுத்துகிறது.

மலேரியாவைத் தடுக்க ஒரு ஆண்டுக்கு கொசு ஒழிப்புக்காக சென்னை மாநகராட்சியால் சுமார் ரூ. 1.50 கோடி செலவழிக்கப்படுகிறது. சென்னை நகரில் மலேரியா தடுப்பு மற்றும் கொசு ஒழிப்புப் பணிகள், அவ்வப்போது சென்னை மாநகராட்சி அலுவலர்கள், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் பொதுப் பணித்துறை அலுவலர்கள் மற்றும் குடிசை மாற்று

வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய வாரியங்களின் அலுவலர்களுடனும் ஆய்வு நடத்தப்பட்டு, இப்பணிகளை தீவிரப்படுத்துவதற்கு தேவைப்படும் அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

(உஉ) பதில் அறிக்கைகள் பெறப்படாத கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு அரசுத் துறைகளிடம் இருந்து அறிக்கைகள் வராதவற்றை குறித்த ஒரு பட்டியலும் அவையில் வைக்கப் பட்டுள்ளது. இவை மாண்புமிகு உறுப்பினர்கள் உரிய மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்தை ஈர்த்ததாகக் கொண்டு அவைக் குறிப்பேட்டில் பதியவைக்கப்படும். இவற்றிற்குத் துறை களிடம் இருந்து அறிக்கைகள் வந்தவுடன் அந்த அறிக்கைகள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்த உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பிவைக்கப்படும்.